மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு அமைச்சர் கூறியவுடனே எனக்கு மிகவும் சந்தோஷம். மிக்க நன்றி என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

86—

குடிநீர்

***1158—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் கிராமப்புறங்களிலுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் களைய அடிபம்புகள் அமைக்கவும், குடிநீர் சீரிய முறையில் கிடைக்கவும் அரசு உடனே ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இன்பத் தமிழன் இருக்கையில் இல்லை. வினா எண் 87, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.